# கொ.மு.சுட்டெண்
## 2023 ஏப்பிறல்

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2023 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன**


பருவகால போக்குகளைத் தொடர்ந்து, 2023இன் ஏப்பிறலில் தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 34.7 ஆக குறைவடைந்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் மாதத்திற்கு மாத சுருக்கமொன்றை எடுத்துக்காட்டியது. அதற்கமைய, உற்பத்தி, புதிய கட்டளைகள், தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்கள் மாச்சில் காணப்பட்ட பருவகால உச்சத்துடன் ஒப்பிடுகையில் ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன.

பதிலிறுப்பாளர்கள் குறிப்பிடுவதற்கமைய, உற்பத்தியில் வீழ்ச்சிக்கு சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு விடுமுறை நாட்களின் காரணமாக ஏப்பிறலில் அநேகமான தொழிற்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை பிரதான காரணமாக அமைந்தது. புதிய கட்டளைகளில் குறிப்பாக உணவு மற்றும் குடிவகைகளின் தயாரித்தலின் வீழ்ச்சிக்கு பண்டிகைக்கால கேள்வி முடிவுற்றமை முக்கிய காரணமாக அமைந்தது. இதற்கு மேலதிகமாக, புதிய கட்டளைகளில் வீழ்ச்சியொன்றைத் தோற்றுவித்து, மந்தமடைந்த உலகளாவிய கேள்வியை தொடர்ச்சியாக தாம் அவதானித்தனர் என ஆடைகள் மற்றும் அணியும் ஆடைகளின் தயாரிப்புத் துறைகளிலுள்ள சில பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பனவும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை நிரம்பலர்களின் விநியோக நேரம் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஏப்பிறலில் சற்று நீட்சியடைந்தது.

**தயாரிப்பு கொ.மு.சு 34.7**

**2023 ஏப்பிறல்**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | மார்ச் | ஏப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **51.4** | **34.7** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| **கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள்** | | | | |
| புதிய கட்டளைகள் | 55.9 | 33.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| உற்பத்தி | 55.8 | 24.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 45.2 | 42.0 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 45.8 | 25.3 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 47.3 | 51.5 | + | குறுகுதலலிருந்து நீட்சியடைந்தது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்தவரும் மூன்று மாதங்களுக்குத் தயாரிப்பு பணிகளுக்கான எதிர்பார்க்கைகள் பொருளாதாரச் சூழலில் சாதகமான அபிவிருத்தியொன்றை எதிர்பார்த்து, முன்னேற்றமொன்றை எடுத்துக்காட்டின.

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2023 மாச்சுடன் ஒப்பிடுகையில் ஏப்பிறலில் 49.6இல் மாற்றமின்றிக் காணப்பட்டனது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சியில் இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அமெரிக்கா நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு. உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை ரஷ்யாவில் இச்சுட்டெண் மெதுவான வேகத்தில் அதிகரித்தது. எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஏப்பிறலில் யூரோவலயம், ஐக்கிய இராச்சியம் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 மே 12இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் உலக முழுவதும் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கொ.மு. சுட்டெண்களைத் தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2023 ஏப்பிறலில் 49.6 சுட்டெண் பெறுமதியினை பதிவுசெய்து நடுநிலையான அடிப்படை அளவிற்கு சற்று கீழே காணப்பட்டது.** புதிய வியாபாரங்கள், தொழில்நிலை மற்றும் நிலுவையிலுள்ள பணிகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளால் இது தூண்டப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், தொழில் நடவடிக்கைகளும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகளும் மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் அதிகரித்தன.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, காப்புறுதி, போக்குவரத்து அத்துடன் அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளுடன் 2023 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2023 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன.

பணிகள் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகள் ஏப்பிறலில் குறைவான வீதத்திலேனும் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்தன. அதற்கமைய, ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் துணைத் துறையில் காணப்படும் தொழில் நடவடிக்கைகள் பண்டிகை காலத்திற்கு மத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றைக் காண்பித்தன. மேலும், கல்வி மற்றும் தொலைத் தொடர்பூட்டல் துணைத் துறைகளும் மாதகாலப்பகுதியில் சிறிதளவான அதிகரிப்பை பதிவுசெய்தன. அதேவேளை, பண்டிகைக்கான கேள்வி மற்றும் பருவகால விலைக்கழிவுகள் என்பவற்றிற்கு மத்தியில், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக துணைத் துறையுடன் தொடர்புடைய தொழில் நடவடிக்கைகள் மந்தமான நிலையில் காணப்பட்டன.

மாதகாலப்பகுதியில் சில புதிய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்ற போதும், பதவிவிலகல்கள், புலம்பெயர்வுகள் மற்றும் ஓய்வுபெறுதல் என்பவற்றின் காரணமாக தொழில்நிலை தொடர்ச்சியாக உயர்வான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகளும் மாதகாலப்பகுதியில் உயர்வான வீதத்தில் வீழ்ச்சியடைந்தன.


| மாறி | மார்ச் | ஏப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **55.1** | **49.6** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| **கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்** | | | | |
| புதிய வியாபாரங்கள் | 59.7 | 47.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில் நடவடிக்கை | 56.1 | 51.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 42.9 | 42.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 46.6 | 45.7 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 70.4 | 61.1 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பேரண்ட பொருளாதார நிலைமைகளின் முன்னேற்றங்களுடன் தொடர்புடைய சாதகமான எண்ணப்பாங்குகளால் உந்தப்பட்டு ஏப்பிறலில் அடுத்த மூன்று மாதங்களுக்கு தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் முன்னேற்றமடைந்தன.

**பணிகள்**
**கொ.மு.சு 49.6**
**2023 ஏப்பிறல்**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2023 மார்ச்சின் 54.4 இலிருந்து 2023 ஏப்பிறலில் 55.4 இற்கு உயர்வடைந்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்துகின்றது.

சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஏப்பிறலில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டின.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல், 2023 மே 12 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.
கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.
**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**
தொழில்நிலை : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை
கொள்வனவுகளின் இருப்பு : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்
நிரம்பலர் வழங்கல் நேரம் : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு
நிலுவையிலுள்ள பணிகள் : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள்
மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.